செ.வெ.எண்-44 நாள்: 17-8-2017

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், நீலகிரி மாவட்டப் பிரிவு, உதகமண்டலம்.

சிறந்த விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்கான
SDAT ஊக்க உதவித் தொகை திட்டம்.

**2017–18**ஆம் கல்வி ஆண்டில் தமிழகத்தில் உயர்நிலை மேல்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரி பல்கலைக் கழகத்தில் பயிலும் தகுதியுடைய விளையாட்டு வீரர் வீராங்கனைகள் SDAT ஊக்க உதவித் தொகை திட்டத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான ஊக்க உதவித் தொகை உயர்நிலைப பள்ளி மேல்நிலைப் பள்ளி விளையாட்டு வீரர்களுக்கு ரூ.10,000 ம் மற்றும் கல்லூரி பல்கலைக் கழக விளையாட்டு வீரர்களுக்கு ரூ.13,000 ஆக வழங்கப்படவுள்ளது.

1.7.2016 முதல் 30.6.2017 முடியவுள்ள காலக் கட்டத்தில் விளையாட்டுத் துறையில் வெற்றிகளைப் பெற்று தகுதியும் திறனுமுடைய விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். மேலும் இத்திட்டத்தில் விண்ணப்பிக்க இந்திய பள்ளி விளையாட்டுக்கள் கூட்டமைப்பு நடத்தும் தேசிய போட்டிகளில் / தேசிய விளையாட்டு சம்மேளனங்கள் நடத்தும் தேசிய, மாநிலங்களுக்கிடையேயான சாம்பியன்ஷிப் போட்டிகளில் / கேலோ இந்தியா திட்டத்தின்கீழ் மைய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் நடத்தும் தேசிய அளவிலான போட்டிகளில் தேசிய விளையாட்டு போட்டிகளில் தனிநபர் போட்டிகளாயின் முதல் மூன்று இடத்தில் அல்லது குழுப் போட்டிகளாயின் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்றிறுத்தல் வேண்டும்.

கல்லூரி / பல்கலைக் கழக முதலாமாண்டு மாணவ/ மாணவிகளுக்கு மட்டும் இந்திய பள்ளி விளையாட்டுக்கள் கூட்டமைப்பு நடத்தும் போட்டிகளில் பதக்கங்கள் பெற்றிருக்க வேண்டும். ஏனைய ஆண்டுகளில் படிப்பவர்களுக்கு இந்திய பல்கலைக் கழகங்கள் நடத்தும் அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கிடையேயான போட்டிகளில் பதக்கம் பெற்றிருக்க வேண்டும். அதாவது தனிநபர் போட்டிகளாயின் முதல் மூன்று இடங்கள், குழுப் போட்டிகளாயின் முதல் இரண்டு இடங்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

இத்திட்டத்திற்கு கருதப்படும் விளையாட்டுகள் - 1) தடகளம், 2) இறகுப்பந்து, 3) கூடைப்பந்து, 4) கடற்கரை கையுந்துபந்து, 5) குத்துச்சண்டை, 6) கேரம், 7) சதுரங்கம், 8) கிரிக்கெட், 9) மிதிவண்டி ஓட்டுதல், 10) வாள்சண்டை, 11) ஜிமனாஸ்டிக்ஸ், 12) கால்பந்து, 13) கைப்பந்து, 14) வளைகோல்பந்து, 15)ஜூடோ, 16) கபாடி, 17) கோ-கோ, 18)வலுதூக்குதல், 19) படகோட்டுதல், 20) துப்பாக்கி சுடுதல், 21) ஸ்குவாஷ், 22) நீச்சல், 23) ஸ்கேட்டிங், 24) பாய்மரப் படகோட்டுதல், 25) சிலம்பம், 26)டிரையத்லான், 27) டேக்வாண்டா, 28) டென்னிஸ், 29) மேசைப்பந்து, 30)கையுந்துபந்து, 31) எறிபந்து, 32) பளுதூக்குதல், 33) வபைந்து மற்றும் 34) சா∴ப்ட் பால் டென்னிஸ்.

இதற்கான விண்ணப்பப் படிவத்தின் விலை ரூ.10 ஆகும். விண்ணப்பத்தினை மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலரின் அலுவலகத்தில் உரிய விண்ணப்பத் தொகையினை செலுத்தி பெற்று கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரிடையாக 31.08.2017ந் தேதிக்கு முன்னர் நீலகிரி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் அலுவலகத்தில் தக்க அசல் சான்றிதழ் மற்றும் நகல் ஆகியவற்றுடன் நேரில் சமர்ப்பிக்க வேண்டும்.

பள்ளித் தலைமையாசிரியர் /பள்ளி முதல்வர் /கல்லூரி முதல்வர் அவர்களிடமிருந்து கையொப்பம் பெறப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

இவ்வாறு நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஒம் .. .. ..
மாவட்ட ஆட்சித் தலைவர்.
நீலகிரி மாவட்டம்.